மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டிற்குள்ளாகவே சில குறிப்பிட்ட தந்தி நிலையங்களைப் பொறுத்த வரையில் தந்திச் செய்திகளைத் தமிழிலேயே அனுப்புவதற்கு வசதி செய்து தருமாறு இந்திய அரசிற்குச் சென்ற 1966-ம் ஆண்டில் இவ்வரசு எழுதியது. இந்திய அரசு தன்னுடைய பதிலில் தமிழில் தந்திச் செய்திகளை அனுப்புவதில் சில சிக்கல்கள் ஏற்படுமென்றும் மற்ற மொழிக்காரர்களும் இவ்வசதியைத் தங்களுக்கும் தருமாறு கேட்பார்களென்றும் இப்போதுள்ள முறையிலேயே ரோமன் எழுத்துக்களில் தமிழ்ச்செய்தியை அனுப்பலாமென்றும் குறிப்பிட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : இதுபற்றி மீண்டும் இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மீண்டும் வற்புறுத்தலாம். இப்பொழுது அந்தந்த மாநில வட்டார மொழிக்கு அதிகமான வசதிகளும் சலுகைகளும் தரவேண்டும் என்ற கோரிக்கை இருக்கும் காரணத்தால், மீண்டும் வற்புறுத்துவதன் மூலம் அந்தச் சலுகைகள் கிடைக்கலாம். கிட்டதட்ட இரண்டு கோடி, மூன்று கோடி, மூன்றரை கோடி மக்கள் என்ற அளவில் ஒவ்வொரு மாநிலமும் இருக்கும் காரணத்தால், அத்தகைய மாநிலங்களில் இத்தகைய ஏற்பாடுகள் செய்வதில் கடினம் இராது என்ற அடிப்படையில், மீண்டும் வற்புறுத்தலாமா என்பதுபற்றித்தான் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

சத்தியமங்கலம்—பழனி ரயில் பாதை.

***142. வின. திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலத்திற்கும் பழனிக்குமிடையே கோபி, குன்னத்தூர், தாராபுரம் வழியாக ரயில் பாதை அமைக்கும்படி மத்திய அரசுக்கு இம்மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா ?

(இ) ஆம். எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இந்திய அரசுக்கு அவ்வித பரிந்துரை எதும் செய்யப்படவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. சு. துரைசாமி : சத்தியமங்கலத்திலிருந்து மதுரைக்குச் செல்வதற்கு எந்தவிதமான ரயில்வே போக்குவரத்தும் இல்லாமல் இருக்கிறது. சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் வரையில் ஒரு இரயில் பாதை போடும் திட்டம் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, முதலில், மதுரையிலிருந்து சத்தியமங்கலம் வரை இரயில் பாதை போட்டால், பின்னால் விரிவுபடுத்த வசதியாக இருக்கும். ஆகவே, அதைப் போடுமாறு நம்முடைய அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை வழங்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பரிந்துரை செய்யப்பட்ட பல இரயில் பாதைகளையே இன்னும் மத்திய அரசு நிறைவேற்றாத நிலையில், ஒப்பளிப்பு வழங்காமல் இருக்கிறது. இருப்பதை எடுத்துவிடக்கூடிய நிலைமையிலும் அவர்கள் இருக்கிறார்கள். முதலில் அதைக் காப்பாற்றிக் கொண்டுதான், இவைகளைப் பற்றிப் பிறகு யோசிக்க வேண்டும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : காமராஜநகரிலிருந்து சத்தியமங்கலத்திற்கும், பிறகு சத்தியமங்கலத்திலிருந்து ஈரோடுக்கும் ஒரு இரயில் பாதை அமைப்பதாக யோசனை இருந்தது. அது சம்பந்தமாக இப்பொழுது ஏதாவது யோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் ஏற்கெனவே சொன்னேன். பரிந்துரைக்கப்பட்ட இரயில் பாதைகளில் இவை இல்லை.

திருமதி. வி. ப. பழனியம்மாள் : திருப்பூரிலிருந்து தாராபுரம் வழியாக பழநிக்கு ஒரு இரயில் பாதை போடவேண்டுமென்று பத்தாண்டு காலமாக நாங்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1965-ம் ஆண்டில் பரிந்துரை செய்யப்பட்ட இரயில் பாதைகளுக்கே இன்னும் அனுமதி வழங்கப்பட வில்லை. அவைகளுக்கெல்லாம் அனுமதி கிடைத்த பிறகுதான் இவை களைப் பற்றி மத்திய அரசுக்கு எழுத வேண்டும்.

திரு. கே. விநாயகம் : புதிதாக இரயில் பாதை அமைப்பது அவ்வளவு சுலபம் அல்ல என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இருப்பதையே போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலை இப்பொழுது இருக்கிறதே, இருக்கும் இரயில் பாதைகளிலேயே இரண்டு மூன்றை எடுத்துவிடலாம் என்று மத்திய சர்க்கார் சொல்கிறார்களே, அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கையை நமது மாநில அரசாங்கம் எடுத்தது ? அப்படி எடுத்த நடவடிக்கைக்கு மத்திய அரசில் உள்ளவர்களின் ரீ-ஆக்ஷன் , என்ன ? அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் ? அவர்கள் எடுத்துவிட்டால், விட்டுவிடுவதற்கு இந்த மாநில அரசில் உள்ளவர்கள் தயாராக இருக் கிறார்களா ? இருந்ததையும் எடுத்துவிட அவர்கள் முயற்சி செய்யும் போது, அதற்கு மாநில அரசின் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த இரயில் பாதைகளை எடுக்கக்கூடாது என்று நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அது பற்றி கடிதப் போக்கு வரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் களும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களது முடி வையே அவர்கள் உறுதிப்படுத்துவதற்கான முயற்சியில் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கட்டத்திலிருந்து இறங்கி வர வேண்டும் என்றுதான் தமிழக அரசு இன்றைய தினம் அவர்களை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அதைச் செய்யும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : திண்டுக்கல் கூடலூர் இரயில் பாதை, 1947-ம் ஆண்டே சர்வே செய்யப்பட்டு, அந்தப் பாதை சம்பந்தமான வேலையைத் துவக்கின நேரத்தில், ஆட்சி மாறிய காரணத்தால் அது நிறுத்தப்பட்டது. திண்டுக்கல்—கூடலூர் பாதை மிக முக்கியமான பாதை யாக இருப்பதால், அதை இந்த அரசு வற்புறுத்தி, அடுத்த ஆண்டி லாவது சேர்ப்பதற்குப் பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு இருப்புப் பாதையைப் பற்றித் தனித்தனியாகக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். ஆனால், பரிந்துரை செய்யப்பட்ட பாதை களினுடைய கதியே என்னவென்று இப்பொழுது தெரியவில்லை. இருக்கும் இரயில் பாதைகளின் கதியும் முடிவாக வில்லை. இதற்குப் பிறகுதான் புதிய இரயில் பாதைகளை பரிந்துரை செய்வதுபற்றி யோசிக்கவேண்டும்.

திரு. ஆர் பொன்னப்ப நாடார் : பரிந்துரை வழங்கப்பட்ட இரயில் பாதைகளின் வரிசை முறை பற்றிய விவரம் இருக்கிறதா ? இருந்தால், தெரிவிக்கமுடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த வரிசையைப் படித்தால் கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கோபம் கொள்ளமாட்டார் என்றே கருதுகிறேன். இது 1965-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட பட்டியல். அந்த வரிசை பின்வருமாறு :—

(1) சென்னை—அரக்கோணம், சென்னை—கும்மிடிபூண்டி இருப்புப் பாதையில் மின்சார ரயில்கள் விட ஏற்பாடுகள் செய்தல்.

(2) சேலத்திலிருந்து கரூர் வழியாகத் திண்டுக்கல்லுக்கு பிராட் கேஜ் இருப்புப் பாதை ஒன்றைப் புதிதாக அமைத்தல் ; திண்டுக்கல்லி லிருந்து மதுரை வழியாகத் தூத்துக்குடி செல்லும் இருப்புப் பாதையை பிராட்கேஜ் இரயில் பாதையாக மாற்றுதல் ; இதில் மணியாச்சியிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்கிற இணைப்பும் அடங்கும்.

3 திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயில் வழியாகத் திருவனந்த திற்கு நாகர்கோயிலிருந்து கன்னியாகுமரிக்கு ஒரு கிளைப் பாதையுடன்) புதிய இருப்புப்பாதை ஒன்று அமைத்தல் :

(4) திருச்சிராப்பள்ளிக்கும் விழுப்புரத்திற்கும் இடையில் உள்ள குறுக்கு வழி இருப்புப்பாதையை பிராட்கேஜ் இருப்புப் பாதையாக மாற்றி அமைத்தல் ; விழுப்புரத்திலிருந்து செங்கற்பட்டிற்கு கூடுதலாக பிராட் கேஜ் இருப்புப்பாதை ஒன்றை அமைத்தல் : அரக்கோணத்திற்கு செங்கற்பட்டிற்கும் இடையே உள்ள இருப்புப் பாதையை பிராட்கேஜ் பாதை யாக மாற்றியமைத்தல்.

இதில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் விரும்பு கிற பாதை மூன்றாவது கட்டத்தில் இருக்கிறது.

திரு. வ. ஜார்ஜ் : அவைத் தலைவர் அவர்களே, இந்த வரிசைத் திட்டம் 1965-லேயே முந்தைய அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதுள்ள அரசாங்கம் வரிசை முறையை மாற்றி, மூன்றாவது திட்டத்தை முதலாவது திட்டமாகக் கொண்டு வர உத்தேசித்திருக்கிறதா ? அப்படி கொண்டு வர முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நண்பர் ஜார்ஜ் அவர்களுக்காக இதைச் சேர்த்தால் அரக்கோணம் மூன்றாவது இடத்திற்கு வரும் அப் பொழுது நண்பர் எஸ். ஜே. ராமசாமி அவர்கள் அரக்கோணத்திற்காக வாதாட வருவார்.

திரு. வி. டி. அண்ணாமலை : தலைவர் அவர்களே, செங்கற்பட்டிலிருந்து சின்னசேலத்திற்கு, திருவண்ணாமலை, வந்தவாசி, உத்திரமேரூர் வழியாக ஒரு ரயில்பாதை போட சர்வே எல்லாம் செய்யப்பட்டது. அது எந்த நிலைமையில் இருக்கிறது? அப்பாதையை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கொண்டிருக்க விரும்பவில்லை. முதலில் பரிந்துரை செய்த பாதைகளுக்கு அனுமதி கிடைத்த பிறகுதான் மற்றவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ள முடியும்.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கிற பாதைகள் போகாமல் இருக்க வெறும் கடிதப் போக்குவரத்து நடத்து வதைவிட, சட்டசபையிலே ஒரு நம்பிக்கைத் தீர்மானம் போட்டு, பின்னர் பல கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் எல்லோரும் ஒரு குழுவாக Madras Peopels Representation என்கிற ஹோதாவிலே மத்திய அரசாங் கத்தில் பொறுப்புள்ளவர்களை நேரிடையாகப் பார்த்து எடுத்துச்சொன்னால் நன்றாக இருக்கும் அல்லவா? இந்தப் பாதைகளை எடுத்து விட்டால் தென்னகத்தில் ஒரு கொந்தளிப்பு ஏற்படும் என்று இந்தக் குழு மத்திய அரசிடம் எடுத்துச்சொன்னால், அப்போதாவது மத்திய அரசு இந்தப் பாதைகளை அகற்றாமல் இருக்க முடிவு எடுக்காதா?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அரசாங்கம் என்றாலே பொது மக்களுடைய பிரதிநிதி என்றுதான் அர்த்தம். இந்த ரயில் பாதை களைப் பொறுத்தமட்டில் இந்தச் சட்டசபையிலுள்ள யாருக்கும் எந்த விதமான வேறுபாடான கருத்தோ முரண்பாடான கருத்தோ இல்லை யென்பது மத்திய அரசுக்குப் புரிந்திருக்கிறது. இந்த விஷயத்தில் ஒருமித்த கருத்து இந்த மன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறதென்பதை மத்திய அரசு அறியும். இந்தப் பாதைகளை எடுத்துவிட்டால் தென்ன கத்தில் ஒரு கொந்தளிப்பு ஏற்படும் என்பதையும் மத்திய அரசு அறிந்திருக்கிறது. இங்கு இருக்கிற எதிர்க் கட்சிகள் வெளியிலே கூட்டம் போடலாம், கண்டனக் குரல் எழுப்பலாம். ஆனால் எழுச்சிநாள் என்று கொண்டாடுகிற நேரத்தில் தூத்துக்குடிபோல் ஒதுங்கிப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

DR. H. V. HANDE : There are several railway zones like northern zone and southern zone. Have this Government questioned the Central Government as to the exact basis on which new

[1968 மார்ச் 5

railway lines are incorporated in each zone and whether there has been any partiality against the Southern Zone? The State Government can get this information if they address the Central Government to give this information. Will this Government come forward to find out the basis on which new railway lines are incorporated in each zone, the prospects of successfully convincing that the railway lines should not be removed and the prospects of our getting new railway lines as against other zones?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவைகளைப் பற்றிப் பட்சபாதமாக சில காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் அறவே மறுப்பதற்கில்லை. இருக்கின்ற பாதைகளை அகற்றுகின்ற நேரத்தில் புதிய ரயில் பாதைகள் போடுவார்கள் என்று நாம் எதிர் பார்ப்பதற்கில்லை. முதலில் இருக்கின்ற பாதைகளை நாம் காப்பாற்றியாக வேண்டும். இதற்காகத்தான் நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளு மன்றத்தில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாதைகளை அகற்ற வேண்டாமென்று இந்த அரசும் நல்ல முறையில் வலியுறுத்திக் கொண்டேயிருக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, ஆரம்பத் திலேயே கண்டன நாளோ, எதிர்ப்பு நாளோ, எழுச்சி நாளோ, டெப்யு டேஷனோ இல்லையென்று சொன்னாலும் முதன்முதலாக இந்த சபையிலே ஏகமனதாக ஒரு தீர்மானம் போடுவது, பின்னர் எழுச்சி தினத்திலே கலந்துகொள்வது, பின்னர் ஒரு டெப்யுடேஷன் – தூதுக்குழு செல்வது என்ற அடிப்படையிலாவது இதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அரசு எழுதிய கடிதத்திற்கு மத்திய அரசிடமிருந்து வருகின்ற பதிலைப் பார்த்து, அவர்களுடைய எண்ணம் எப்படியிருக்கிறது என்று அறிந்த பிறகுதான், சட்டசபை தீர்மானம், தூதுக்குழு செல்வது போன்ற நட வடிக்கைகள் பற்றி யோசிக்கப்படும்.

திரு. ப. மகாதேவன் : அவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத் திலுள்ள மாவட்டங்களில் ரயிலே நுழையாத மாவட்டம் எங்கள் மா வட்டம். குறிப்பாக எங்கள் மாவட்ட மக்களில் பலர் கண்காட்சியில்தான் ரயிலைப் பார்த்திருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு பரிந்துரை செய்து எங்கள் மாவட்டத்தில் ரயில்விட ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நாங்கள் சொல்லும்போது கன்னியா குமரி மாவட்டத்தைப்பற்றி மிகவும் அழுத்தந்திருத்தமாகச் சொல்லுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, இருக்கின்ற பாதைகளை அகற்றாமல் இருப்பதற்கு மத்திய சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லையென்று சொன்னால், குறிப்பிட்ட பாதைகளை நாமே எடுத்து நடத்துவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இப்போதே மத்திய சர்க்கார் நம் கோரிக்கைக்குச் செவிசாய்க்க மாட்டார்கள் என்ற அவநம்பிக்கைக்கு வந்து விடவேண்டாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, சபையிலே கொடுக கப்பட்ட கேள்வியிலே சத்தியமங்கலத்திற்கும் பழனிக்குமிடையே ரயில் பாதை அமைப்பதுபற்றி என்று இருக்கிறது. ஏற்கனவே சாம்ராஜநகருக் கும் சத்தியமங்கலத்திற்கும் ரயில் பாதை போட வேண்டுமென்று முந்தைய அரசாங்கம் திட்டமிட்டிருந்தது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்தப் பாதை போடுவதற்கான முயற்சிகளைச் செய்ய இந்த அரசு சிபாரிசு செய்யுமா?

1968, மார்ச் 5]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாம்ராஜநகருக்கும் சத்தியமங்கலத்திற்குமிடையேயுள்ள ரயில்பாதையைப்பற்றி கனம் எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் கேட்டார்கள். கன்னட மக்களோடு எவ்வளவு தொடர்புடையவராக இருக்கிறார் என்ற அவரது உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The Salem-Bangalore Railway line was taken up many years ago. It is yet in an incomplete condition. Train service has been given up to Dharmapuri and beyond that the service is not quite proper. Will this Government recommend to the Central Government to complete this work as early as possible ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இதுவும் மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும்.

திரு கே. விநாயகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து ஒன்றைக் கூற விரும்புகிறேன். தூத்துக்குடி எழுச்சி நாள் எல்லா கட்சிக்காரர்களையும் கலந்து செய்யவில்லையென்பது அவருக்குத் தெரியுமா? காங்கிரஸ் கட்சியையும் கலந்து, தேசிய ஒருமைப்பாட்டையும் மாநில நன்மையையும் கருத்திற்கொண்டு செய்யலாம் அல்லவா ? அப்படி எங்களைக் கலக்காமல் செய்துவிட்டு, எல்லோரும் சேரவில்லை என்பதில் பொருள் இல்லை. எங்களைக் கலக்காமல் செய்ததால்தான் தூத்துக்குடி எழுச்சி நாளில் நாங்கள் சேரவில்லை.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தூத்துக்குடி பற்றியும் ரயில்வே லைன்கள் எடுக்கக்கூடாது என்று நாம் சொல்லும்போது 'மத்திய அரசு எந்த அளவுக்கு அக்கறையில்லாமல் இருக்கிறது' என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 143. திரு எ. சிதம்பரநாத நாடார் அவர்களுடைய வினாவை திரு ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

Sea-erosions at Colachel Port.

*143 Q.—THIRU R. PONNAPPA NADAR (on behalf of Thiru A. CHIDAMBARANATHAN NADAR) : Will the Hon. the Minister for Public Works be pleased to state —

(a) whether the Government are aware that there are frequent sea-erosions at Colachel Port and surroundings ; and

(b) the steps taken by the Government to avert the rigours of erosion ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : (அ) கொளச்சல் துறைமுகப் பகுதியில் கடல் அரிப்பு ஏற்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கொளச்சல் துறைமுகப் பகுதிக்கு அருகாமையில் விடாரம் போன்ற பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. அதுபற்றி மாவட்டக் கலெக்டரிடமிருந்து ரிப்போர்ட் ஏதேனும் வந்திருக்கிறதா ?